Supply of coal

* 2303 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to sttae—

(*a*) whether the Government have made representations to the Centre for ensuring regular and speedy supply of coal for the industries in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government of India have been requested to lift all booking restrictions on movement of raw materials to the Southern Region. They have also been requested to remove the bottlenecks at the marshalling yards at Waltair, Vijayawada, etc., by suitable expansion of the yards. Further they have been urged to arrange to send the coal and coke by sea and also to reduce the freight so that the coal brought by sea does not cost more than that brought by all-rail-route. The question of strengthening the tract capacity between Calcutta and Madras has also been suggested to the Government of India and taken up at the Southern Zonal Council.

SRI M. KALYANASUNDARAM : நமது ராஜ்யத்திற்கு கோக் பற்றாக் குறையாக இருப்பதனால் பல என்ஜினியரிங் தொழிற்சாலைகளின் வேலை தடைபட்டிருக்கிறது என்பது தெரியுமா? இருநூறு வாகன் ஒதுக்கப்பட்டிருப்பதிலே 25 வாகன்தான் வந்திருக்கிறது. அதனால் டன் 70 ரூபாய்க்கு விற்கவேண்டியது 300 ரூபாயாக விற்கப்படுவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? உடனடியாக அந்தக் கஷ்டத்தை நிவாரணம் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : நமது தமிழ்நாட்டுப் பிராந்தியத்திற்கு மாதம் ஒன்றுக்கு 650 வாகன் அலாட்மெண்டு வாங்கியிருக்கிறோம். அது பேப்பர் அலாட்மெண்டே தவிர வந்து சேரவில்லை. அந்த கோக் சென்னைக்கு வந்து சேராமல் இருப்பதற்கு முக்கிய காரணம் ரயில்வே வாகன் கிடைக்கவில்லை. டிராக்ட் கபாஸிடி கிடைக்கவில்லை. அதனால்தான் இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நம் ராஜ்யத் தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக அடிக்கடி நாங்கள் மத்திய சர்க்காருக்கும், ரெயில்வே மந்திரி அவர்களுக்கும் கடிதங்கள் எழுதி வற்புறுத்தி வருகிறோம். சமீபத்தில் நிலக்கரிகோல் மாத்திரம் கப்பல் வழியாகக் கொண்டு வருவதாக இருந்தால் விலையைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். கோக் பற்றாக் குறை தீரவேண்டுமானால் நமது ராஜ்யத்திலேயே ஒரு கோக் பாக்டரி வைக்கவேண்டுமென்பது சர்க்காரின் நோக்கம். அதை சென்னை ராஜ்யத்தில் அமைத்தால்தான் நமது பற்றாக் குறை தீரும் என்று நினைக்கிறேன்.